
# 10.லிச்டென்ஸ்டெயின்

*இ.ஜே.சுந்தர்*






இந்தியாவின் 29 மாநிலங்களிலும், 7 யூனியன் பகுதிகளிலும் உள்ள 132 கோடி மக்களும் ஒரே நாடாக இங்கு வாழ்கின்றனர். ஆனால் ஐரோப்பாவில் உள்ள நாடுகளிடையே இனத்தாலும், பழக்கவழக்கங்களாலும், சமயத்தாலும் நிறைந்த ஒற்றுமை காணப்படினும் அவை ஒரே நாடாக இருக்க விரும்பவில்லை. உலகின் இரண்டாவது சிறிய ஐரோப்பா கண்டத்தில் 51 தனிநாடுகள் உள்ளன, அவற்றின் மொத்த மக்கட்தொகையே ஏறத்தாழ 74 கோடிதான். இதில் கடந்த 50 ஆண்டுகளில் புதிதாக உருவானவை 30க்கும் மேற்பட்ட நாடுகளாகும். இதில் கையளவு தேசமாக உள்ள மைக்ரோ ஸ்டேட் என்ற 6 தனி நாடுகளும்(வத்திக்கான், மால்டா, சான் மரினோ, அன்டோரா, மொனாக்கோ, லிச்டென்ஸ்டெயின்) அடங்கும். மக்களாட்சியைப் போர்த்தியிருக்கும் ஐரோப்பிய ஆடையில் ஒரு பட்டன் அளவு இருந்துகொண்டு, இன்னும் மன்னரின் கை ஓங்கியுள்ள சிற்றரசாக உள்ள லிச்டென்ஸ்டெயின்(Principality of Liechtenstein) என்ற குறுநாடு பல வியப்புகளை உள்ளடக்கியுள்ளது.


*தனித்தன்மை கொண்ட இயற்கைப் பேரெழில்*

வெறும் 37,000 மக்கள் வாழும் இந்த நாட்டின் பரப்பளவு 160.4 சதுர கி.மீ தான். நாட்டின் நீளமே 24 கி.மீதான். உலகின் 6வது சிறிய நாடு. எனினும் கடுகு சிறுத்தாலும் குறையாத காரமாக, தனிநபர் வருவாயில், $1,57,040 என்று, உலகின் இரண்டாவது இடத்தில் உள்ளது.( இந்தியா 150 வது இடத்தில்- $1586). தெற்கிலும், மேற்கிலும் சுவிட்சர்லாந்து, வடக்கிலும், கிழக்கிலும் ஆஸ்திரியா என்று நாற்புறமும் லிச்டென்ஸ்டெயின் நிலத்தால் சூழப்பட்டுள்ளது. இதுபோல நிலத்தால் முற்றிலும் சூழப்பட்ட இன்னொரு நாடு உஸ்பெஸ்கிஸ்தான். சுவிஸ் பெருநகர் ஜூரிச்சிலிருந்து லிச்டென்ஸ்டெயின் தலைநகர் வடுசுக்கு 77 கி.மீ தொலைவுதான்.



*அழகிய நாடு*

ஆல்ப்ஸ் மலையின் பள்ளத்தாக்கில் ரைன் நதியின் மேல்பகுதியில் அமைந்துள்ள இந்நாடு பக்கத்து சுவிஸ், ஆஸ்திரியா நாடுகளைப் போல உள்ளது என்று சொல்லமுடியாதபடி தனக்கென தனித்தன்மையான அழகு படைத்தது. கண்ணுக்குக் குளிர்ச்சிதரும் இயற்கையின் பேரெழிலோடு, பைக்கிங், ஹைக்கிங், மலைஏறல், பனிச்சறுக்கல் முதலிய விதவிதமான விளையாட்டுகளையும் பொழுதுபோக்குகளையும் சுற்றுலாப்பயணிகளுக்கு இந்நாடு அள்ளி வழங்குகிறது.



*ஹைக்கிங் செல்வோர்*

கி.மு 5300 ஆண்டளவிலேயே இங்கு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அலிமன்னி என்ற இனக்குழுவினர் கி.பி 540 இல் இங்கு குடியேறினர். இவர்களே இம்மக்கள் பலரின் மூதாதையர். வடூஸ் மற்றும் ஷெலன்பர்க் ஆகிய இரு பகுதிகளை இணைத்து லிச்டென்ஸ்டெயின் என்ற நாடு உருவாக்கப்பட்டது. இவ்விரு பகுதிகளும் புகழ்பெற்ற புனித ரோம பேரரசின் ஆட்சிப்பகுதிகளாகும். 1719 இல் இப்பகுதிகளை ஒன்றாக்கி ஜோசப் ஜோகன் ஆடம் என்ற மன்னர் முடியாட்சியைத் தோற்றுவித்தார். லிச்டென்ஸ்டெயின் என்ற கோட்டையில் இருந்த அரச குடும்பத்தினரின் பெயரால் நாடும் அவ்வாறு பெயர் பெற்றது. லிச்டென்ஸ்டெயின் என்றால் ஒளிரும் கல் என்று பொருள்.



*தேசியக் கொடி*

இரண்டாம் உலகப்போரில் இந்நாடு நடுநிலை வகித்து, சுவிட்சர்லாந்தைச் சார்ந்து நின்றது. எனினும் போருக்குப்பின் செக்கோஸ்லோவாக்கியாவும், போலந்தும் அரசருக்குச்சொந்தமான பாரம்பரிய நிலங்களை, சொத்துகளை ஜெர்மானியர்களுக்குச் சொந்தமானது எனக்காரணங்காட்டி அபகரித்தனர். இவர்கள் அபகரித்த நிலத்தில் கால்வைக்க இந்நாட்டின் குடிமக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். இந்நாடுகளுடனான குளிர்ப்போர் 2009 வரை நீடித்து பின்னரே சுமூகமானது.

போருக்குப்பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க அரச குடும்பம் கலைப்பொருள்களை விற்றது. லியனார்டோ டாவின்சி வரைந்த ஜினிவரா டி பென்சி என்ற ஓவியம் 1967 இல் அமெரிக்காவின் கலை அருங்காட்சியம் ஒன்றால் 5 மில்லியன் டாலருக்கு வாங்கப்பட்டது.. அன்றைய நிலையில் மிக அதிக விலையில் விற்கப்பட்ட கலைப்பொருள் அது. நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த 1970 களில் நாட்டின் வரிகள் குறைக்கப்பட்டுப் பன்னாட்டு நிறுவனங்கள் இங்கு தொழில் செய்ய வழிவகுத்துக் கொடுக்கப்பட்டது. எளிதான வங்கி நெறிமுறைகளால் கறுப்புப் பணத்தைப் பதுக்குவோர் பலரும் இங்கு ஏராளமாக முதலீடு செய்தனர். வரி சொர்க்கமாகத் திகழ்வதால், இன்று ஏறத்தாழ இந்நாட்டின் மக்கள் தொகையைவிட இருமடங்காக 73,700 வணிக நிறுவனங்கள் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் வாயிலாக நாட்டிற்கு 30% வருவாய் கிடைக்கிறது. சுவிஸ் தேசிய வங்கி வழங்கும் சுவிஸ் பிராங்குகளே இங்குள்ள நாணயமாகும். தலைநகர் வடுசில் எங்கு திரும்பினாலும் வங்கிகளைக் காணமுடியும். பிறநாடுகளின் அரசியல் தலையீடு காரணமாக தவறான முறையில் இங்கு பணம் பதுக்குவோரை இனங்காண அரசு ஒப்பியுள்ளது.



*சுவிட்சர்லாந்திற்குச் செல்லும் நடைபாலம்*

இங்கு ஜெர்மன் மொழியே ஆட்சி மொழி. எனினும் அல்மானிக் என்ற ஒருவகை ஜெர்மானிய கிளைமொழியே நாடெங்கும் பேசப்படுகிறது. ஜெர்மனியின் எல்லையில் இல்லாமல் ஜெர்மன் பேசும் ஒரே நாடு இதுவே. . மக்கள் பெரும்பாலும் அல்மானிக் ஜெர்மானியர். சிறிதளவு துருக்கியரும், இத்தாலியரும் உள்ளனர். 76% மக்கள் ரோமன் கத்தோலிக்கர். 9% பேர்கள் புராட்டஸ்டென்டுகள். இசுலாமியரும், மதமற்றோரும் தலா 5.4% உள்ளனர். யூதர்களும் சிறிய அளவில் உள்ளனர்.



*தலைநகர் வடூஸ்*

தலைநகர் வடூஸ் ரைன் நதிக்கரையில் அமைந்துள்ள நகரம். ஆனால் 5425 மக்களே இங்குள்ளனர். வடூஸ் நகரின் மலைமீது உள்ள மன்னர் மாளிகை நகரில் நுழைந்தவுடன் அழகாகக் காட்சியளிக்கும். மன்னர் மாளிகையில் பொதுமக்கள் நுழைய முடியாது.



*மன்னரின் வடூஸ் கோட்டை*

ஜெர்மானியரிடமிருந்து இந்நாடு 1866 இல் விடுதலைபெற்ற தேசிய நாளான ஆகஸ்டு 15 அன்று( இந்திய சுதந்திர தினமும் இதுவே)



*மன்னர் இரண்டாம் ஹான்ஸ் ஆடம்*

மன்னர் இரண்டாம் ஹான்ஸ் ஆடம் மக்கள் அனைவருக்கும் தம் வடூ ஸ் கோட்டை தோட்டத்தில் பீர் விருந்து அளித்து மகிழ்விப்பார்.



*வடூஸ் நகரின் அழகு*

வடூஸ் நகரமே நிர்வாக மையமாகவும், நாடாளுமன்றம் நடைபெறும் இடமாகவும் உள்ளது. ஆனால் நாட்டின் பெரிய நகரம் ஷான் ஆகும். இங்கு 5800 பேர்கள் வாழ்கின்றனர். நாட்டின் பிரதமர்: ஓட்மார் ஹாஸ்லர், ஆளுநர்: இளவரசர் அலோய் (மன்னரின் மகன்).

இன்று முற்றிலும் இந்நாடு தொழில்மயமாகியுள்ளது. செயற்கை பல் தயாரிப்பிங்ல் இந்நாடு உலகில் முன்னணி வகிக்கிறது. இதில் ஐவோக்ளர் விவாடென்ட் என்ற நிறுவனம் ஒரு ஜாம்பவானாகும். உலகின் 20% செயற்கைப் பற்களை இவர்களே உருவாக்குகின்றனர். ஆண்டுக்கு 60 மில்லியன் பல்செட்டுகளை 10,000 மாடல்களில் தயாரிக்கின்றனர். இந்தியாவிலும் இவர்கள் தயாரிக்கும் பற்கள் மிகுதியாக வாங்கப்படுகின்றன. வெற்றிலைப்பாக்கு, பான்பராக் முதலியன போட்டு கறைபடிந்துள்ள பற்களைப் போலவே நம்மவர்களுக்காகத் தயாரித்துத் தருவது இவர்களின் தனிச்சிறப்பாகும். மேலும் நுட்பமான எந்திரப்பகுதிகள், ஆடியோ-வீடியோ இணைப்புகள், மோட்டார் வாகன பகுதிகள்,மூக்குக்கண்ணாடி தொடர்பான பகுதிகள், சிறப்பான மின்னணு கருவிகள், உணவுப்பண்டங்கள் இவை இந்நாட்டில் தயாரிக்கப்பட்டு ஏற்றுமதியாகின்றன. இவை தவிர வேளாண் பொருள்களான கோதுமை, பார்லி, சோளம், உருளை, பால்பொருள்கள் உற்பத்தியிலும் இவர்கள் சக்கைபோடு போடுகிறார்கள். இவர்கள் ஏற்றுமதி பட்டியலில் சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, இத்தாலி, தாய்வான், ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. இங்கு வேலையில்லாதோர் விகிதமும்(1.5%) வெளிநாட்டுக்கடன் அளவும் உலக அளவில் மிகக்குறைவே.

நாட்டிற்குப் பாதுகாப்புச்செலவே இல்லை. காரணம் இங்கு இராணுவமே இல்லை. 1866 இல் ஆஸ்டிரோ- பிரெஷ்ய போரில் துணை செயல்பாட்டிற்காக 80 பேர் கொண்ட இராணுவம் கிளம்பிச் சென்று ஒருவரும் இறக்காமல், 81 பேராகத் திரும்பிவந்தனராம். அதாவது அந்நிய நாட்டுக்காரர் ஒருவரை நண்பராக்கிக்கொண்டு இராணுவம் திரும்பி வந்ததாம். 1868 இல் இராணுவமே கலைக்கப்பட்டது. இந்நாட்டின் கடைசி இராணுவ வீரர் 1939 இல் தம் 95வயதில் காலமானார். உலகில் இராணுவத்தை நீக்கிய முதல் நாடு என்ற பெருமையுடையது இந்நாடே. இதைத்தொடர்ந்து அன்டோரா, கோஸ்டா ரிகா ஆகிய நாடுகளும் இராணுவத்தைக் கலைத்தன. மார்ச் 2007 இல் 170 ஸ்விஸ் இராணுவ வீரர்கள் பயிற்சியின்போது எல்லை தெரியாமல் இந்நாட்டில் 1.5 கி.மீ வரை நுழைந்துவிட்டு, பின் ஸ்விட்சர்லாந்து இந்த எல்லை மீறலுக்கு மன்னிப்புக் கோரியது.

காவல்துறையே நாட்டின் பாதுகாப்பைக் கவனித்துக்கொள்கிறது. நாட்டில் குற்றச்செயல்கள் மிக மிகக் குறைவு. மக்கள் வீட்டுக்கதவுகளைப் பூட்டும் வழக்கமே இல்லை. 1997 க்குப் பிறகு எந்தக் கொலைச்செயலும் நடைபெறவில்லை. இந்நாட்டுச்சிறையில் ஒரு குற்றவாளி இரண்டாண்டே இருக்கமுடியும். அதற்குமேல் தேவைப்பட்டால் ஆஸ்திரிய நாட்டுச்சிறைக்குத்தான் அனுப்புவார்கள். தேவையற்ற இரைச்சல்களை வெறுக்கும் இந்நாட்டினருக்காக மதியம் 12-1.30 வரையும் மற்றும் இரவு 10 மணிக்கு பின்பும் புல்தரைவெட்டும் கருவி இயக்கல் உட்பட எந்த ஒலி மாசும் இங்கு தடைசெய்யப்பட்டதாகப் புதிதாக குடியேறுபவர்களுக்கு அரசு அறிவித்துள்ளது. மக்கள் 100% கற்றவர்கள். உலகின் சிறந்த கல்விமுறையில் இந்நாடு 10வது இடம் வகிக்கிறது. குட்டிநாடாயினும் 4 சிறந்த உயர்கல்வி நிறுவனங்கள் அறிவுப்பசியாற்றுகின்றன. 250 கி.மீ நீள சாலைகளும், 9.5 கி.மீ இருப்புப்பாதையும் நாட்டின் போக்குவரத்தை எளிதாக்கியுள்ளன. சைக்கிளில் செல்வோருக்காக 90 கி.மீ சைக்கிள் பாதையும் அமைத்திருக்கிறார்கள். ஆனால் பன்னாட்டு விமான நிலையம் ஏதுமில்லை. தேவையில்லை என்பதே காரணம்.



*நாடாளுமன்றம், அரசு மையங்கள்*

லிச்டென்ஸ்டெயின் அரசியலமைப்புச் சட்ட முடியாட்சியாகும். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தலும், 25 பேர் கொண்ட நாடாளுமன்றமும் இருக்க மன்னரும் உள்ளார். மற்ற சில ஐரோப்பிய நாடுகளைப்போல மன்னர் 'ரப்பர் ஸ்டாம்ப்' வகையைச் சேர்ந்தவரில்லை.



*மன்னருடன் அரச வாரிசுகள்- மகன் அலோய், பேரன் வென்சல்*

தற்போதைய மன்னர் ஹான்ஸ் ஆடம் 2003 இல் தம் ஆட்சி அதிகாரத்தை மேம்படுத்தும் சட்டத்திருத்தம் கொண்டு வர முயன்றார். இது நிறைவேறவில்லையெனில் தம் சொத்துக்களை நிறுவனங்களுக்கு அளித்துவிட்டு ஆஸ்திரியாவிற்குக் குடியேறுவதாக அறிவித்தார். மன்னருக்கும், மன்னர் குடும்பத்தினருக்கும் மக்களிடம் செல்வாக்கு மிகுதி. 2/3 பேர்கள் மன்னரின் சட்டதிருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன் விளைவாக மன்னரின் அதிகார வரம்பை பெருமளவு உயர்த்திக்கொண்ட ஒரே ஐரோப்பிய நாடாக லிச்டென்ஸ்டெயின் மாறியது. மன்னர் நாடாளுமன்றம் போட்ட எந்தச் சட்டத்தையும் தடுத்து நிறுத்தமுடியும். புது சட்டங்களும் போட முடியும். பொது வாக்கெடுப்புக்கு உட்படுத்தி நாடாளுமன்றத்தையே கலைக்கமுடியும். கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரி என்ற நிலையில் மன்னர் உள்ளார். மன்னர் ஹான்ஸ் ஆடம் உலகின் 6வது பணக்காரர். 5 பில்லியன் டாலர் சொத்துடையவர்.

80.31 ஆண்டுகள் சராசரி ஆயுளுடனும், செல்வச்செழிப்புடனும் வாழும் இந்த நாட்டு மக்கள் கொடுத்துவைத்தவர்கள் என்று தோன்றினாலும், ஒரு விதத்தில் நம் நாட்டைவிட இங்கு ஒரு பின்னடைவு உள்ளது. 01.07.1984 இல் தான் இங்கு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. அதிலும் உள்ளாட்சித்தேர்தலில் 1986 இல் தான் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்க சம்மதித்த கடைசி ஐரோப்பிய நாடு இது. மகளிருக்கு வாக்குரிமை வழங்கலாமா என்று நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில், ஆண்கள் மட்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டதும், அதிலும் 51.3% பேர்களே பெண்களுக்கு வாக்குரிமை வழங்க ஆதரவளித்தனர் என்பதும் சிந்தனைக்குரியது. *(வெற்றி வேந்தன்: மே 2016)*